Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EE ANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2024    தை 10    (23-01-1993)    சனிக்கிழமை    ஓசை 840

Y.M.C.A

## இடம்பெயர்ந்தோருக்கு சீருடைவழங்கநிபந்தனை

இடம் பெயர்ந்து வெவ்வேறு பாடசாலைகளில் கடந்த இரண்டு வருடகாலமாக கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவச சீருடைகளை வழங்குவதற்கு தற்போது அவர்கள் கல்விபயிலும் பாடசாலை அதிபர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர் என தெரியவருகிறது. இடம் பெயர்ந்து பல பாடசாலைகளிலும் கல்வி பயிலும் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகளுக்கு அவர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# சமாதான திட்டத்துடன் கிட்டு வந்தார்

# குவேக்கஸ் அமைப்பு ஊர்ஜிதம்

(லண்டன்)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதானத் திட்டத்துடனேயே புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கிட்டு இலங்கையை நோக்கிக் கப்பலில் பயணித்ததாக தாம் நம்புவதாக 'குவேக்கஸ்' சமாதான சேவைக் குழு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் மனித நேய அமைப்பான குவேக்கஸ் அமைப்பின் செயலாளர் அன்றூ கிளார்க் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒரு தீவிர போராளி என்ற போதிலும், இனப் பிரச்சினைக்கு ஓர் நேர்மையான அரசியல் தீர்வுகாணப் பல காலம் அயராது உழைத்த போராளிகளின் தலைவர் கிட்டு, அதே குறிக்கோளுடன் மனிதாபிமான முறையில் தீர்வு காணும் நோக்கிலேயே அவர் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமாகி இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணும் நோக்கில் கடந்த சில வருடங்களாக குவேக்கஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## தளபதி கிட்டு விவகாரம்

## பேசாலையில் புலிகள் தாக்கு; 2 பொலிஸ் பலி; ஆயுதம் மீட்பு

மன்னார் பேசாலையில் நேற்று விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு சிறிலங்கா காவல் துறையினர் பலியாகினர் அவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் மன்னார் தீவில் காலை 7.05 மணியளவில் பேசாலை காவல்துறை நிலையத்திலிருந்து தல்லுக்குடியிருப்பு காவல் நிலையத்திற்கு சென்றுகொண்டிருந்த இரு காவல் துறையினர் மீது பழையதும்புமில் எனும் இடத்தில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலால் அவ் இரு காவல்துறையினரும் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

- ★ ரி 56-1 ரகதுப்பாக்கி — 01
- ★ 84எஸ்-1ரகதுப்பாக்கி — 01
- ★ ரி 56 மகசின் — 04
- ★ 84 எஸ் மகசின் — 02
- ★ நடுத்தர ரவைகள் — 120
- ★ 5.56 ரவைகள் — 60
- ★ ஏ. கே கோல்சர் — 01
- ★ காவல்துறைதொப்பி — 02

வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு

## சர்வதேச அமைப்புகளுடன் அங்கிலிக்கன் ஆயர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். வந்து கொழும்பிற்கு திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் வணக்கத்திற்குரிய கென்னத் பெர்னாண்டோ ஈழத் தமிழர்படும் இன்னல்கள் குறித்தும், விரைவில் வட-கிழக்குப் பகுதிகளில் நிரந்தர சமாதானம் பிறக்க வேண்டுமென கொழும்பிலுள்ள சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கி வருகிறார்.

இத்தகவலை தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் நேற்று முன்தினம் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள முன்னர் நமது நிருபருக்குத் தெரிவித்தார்

மேலும் கலாநிதி எஸ். ஜெபநேசன் கூறுகையில் வெகுவிரைவில் மீண்டும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ வடபகுதி திரும்பும்போது ஒரு சமாதான தீர்வுத் திட்டத்துடன் வருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு என தெரிவித்தார்.

(05)

# சர்வதேச விசாரணை குழு நிறுவ 30 தமிழக அமைப்புகள் கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) மரணமானது குறித்து சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டும் என ஐக்கியநாடுகள் சபை பொதுச் செயலாளரிடம் கோருவதென தமிழ் நாட்டிலுள்ள முப்பது அமைப்புக்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

தமிழ் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் தலைமையில் கூடிய இவ் அமைப்புக்கள் இந்து மகா சமுத்திரத்தில் விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவிற்கு மரணத்தை உண்டுபண்ணியதாகக் குற்றம்சாட்டியதோடு, இம்மாதம் 20ஆம் திகதியன்று இந்திய பிராந்தியத்தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வதென்றும் முடிவு செய்தன.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேறொரு தீர்மானம், இந்திய அரசாங்கத்தின் இந் நடவடிக்கை தமிழருக்கு அநீதியானது எனக் குற்றம் சாட்டியுள்ளது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றொரு தீர்மானமே தளபதி கிட்டுவின் மரணம் குறித்து சர்வதேச விசார

[6-ம் பக்கம் பார்க்க]

## அவுஸ்திரேலிய தமிழர்கள்

## பேசாலையில் புலிகள் தாக்கு; 2 பொலிஸ் பலி; ஆயுதம் மீட்பு

மன்னார் பேசாலையில் நேற்று விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு சிறிலங்கா காவல் துறையினர் பலியாகினர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் மன்னார் தீவில் காலை 7.05 மணியளவில் பேசாலை காவல்துறை நிலையத்திலிருந்து தல்லுக்குடியிருப்பு காவல் நிலையத்திற்கு சென்று கொண்டிருந்த இரு காவல்துறையினர் மீது பழையதும்புமின் எனும் இடத்தில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலால் அவ் இரு காவல்துறையினரும் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

- ★ ரி 56-1 ரகதுப்பாக்கி — 01
- ★ 84எஸ்-1ரகதுப்பாக்கி — 01
- ★ ரி 56 மகசின் — 04
- ★ 84 எஸ் மகசின் — 02
- ★ நடுத்தர ரவைகள் — 120
- ★ 5.56 ரவைகள் — 60
- ★ ஏ. கே கோக்சர் — 01
- ★ காவல்துறைதொப்பி — 02

வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு

## சர்வதேச அமைப்புகளுடன் அங்கிலிக்கன் ஆயர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். வந்து கொழும்பிற்கு திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் வணக்கத்திற்குரிய கென்னத் பெர்னாண்டோ ஈழத் தமிழர்படும் இன்னல்கள் குறித்தும், விரைவில் வட-கிழக்குப் பகுதிகளில் நிரந்தர சமாதானம் பிறக்க வேண்டுமென கொழும்பிலுள்ள சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கி வருகிறார்.

இத்தகவலை தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் நேற்று முன்தினம் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள முன்னர் நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

மேலும் கலாநிதி எஸ். ஜெபநேசன் கூறுகையில் வெகுவிரைவில் மீண்டும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ வடபகுதி திரும்பும்போது ஒரு சமாதான தீர்வுத் திட்டத்துடன் வருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு என தெரிவித்தார்.

(05)

(லண்டன்)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதானத் திட்டத்துடனேயே புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கிட்டு இலங்கையை நோக்கிக் கப்பலில் பயணித்ததாக தாம் நம்புவதாக 'குவேக்கஸ்' சமாதான சேவைக் குழு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் மனித நேய அமைப்பான குவேக்கஸ் அமைப்பின் செயலாளர் அன்றூ கிளார்க் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒரு தீவிர போராளி என்ற போதிலும், இனப்பிரச்சினைக்கு ஓர் நேர்மையான அரசியல் தீர்வுகாண பல காலம் அயராது உழைத்த போராளிகளின் தலைவர் கிட்டு, அதே குறிக்கோளுடன் மனிதாபிமான முறையில் தீர்வு காணும் நோக்கிலேயே இவர் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமாகி இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணும் நோக்கில் கடந்த சில வருடங்களாக குவேக்கஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

### தளபதி கிட்டு விவகாரம்

# சர்வதேச விசாரணை குழு நிறுவ 30 தமிழக அமைப்புகள் கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) மரணமானது குறித்து சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டும் என ஐக்கியநாடுகள் சபை பொதுச் செயலாளரிடம் கோருவதென தமிழ் நாட்டிலுள்ள முப்பது அமைப்புக்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

தமிழ் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் தலைமையில் கூடிய இவ் அமைப்புக்கள் இந்து மகா சமுத்திரத்தில் விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவிற்கு மரணத்தை உண்டுபண்ணியதாகக் குற்றம்சாட்டியதோடு, இம்மாதம் 20ஆம் திகதியன்று இந்திய பிராந்தியத் தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வதென்றும் முடிவு செய்தன.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேறொரு தீர்மானம், இந்திய அரசாங்கத்தின் இந் நடவடிக்கை தமிழருக்கு அநீதியானது எனக் குற்றம் சாட்டியுள்ளது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றொரு தீர்மானமே தளபதி கிட்டுவின் மரணம் குறித்து சர்வதேச விசார

[6-ம் பக்கம் பார்க்க]

## அவுஸ்திரேலிய தமிழர்கள் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கான்பரா)

கிட்டுவை இந்திய அரசு நயவஞ்சகமாக கொலை செய்ததைக்கண்டித்து அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் அவுஸ்திரேலியாவின் தலைநகர் கான்பராவில் இடம்பெற்றது. இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயத்துக்கு முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டார்கள்.

இம் மக்கள் இந்தியாவிற்கு எதிரான பல கோசங்களை எழுப்பியதுடன் தமிழர் பிரச்சினையில் தீர்வுஏற்படுவதனை இந்தியா தடுக்கிறதெ தன குற்றம் சாட்டினர்.

## இனப்பிரச்சினை தீர்வுக்கு மனித உரிமை குழு முயற்சி

### டென்மார்க் பிரதிநிதி தகவல்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குஇறுதித் தீர்வு ஏற்பட மனித உரிமைகள் குழு பாடுபட்டு வருவதாக டென்மார்க்கில் இருந்து வந்த மனித உரிமை இயக்கப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

அண்மையில் மட்டக்களப்பு பகுதிக்கு சென்ற அவர்மேலும் கூறுகையில், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உறுதியானதும் இறுதியானதுமான தீர்வு ஒன்றைக்காண மேற்கு நாடுகளின் ஒத்துழைப்புடன் பாடுபட்டுவருகிறோம் எனவும் தெரிவித்தார். சமரச சமாதானத் தீர்வு ஏற்பட மேற்கு நாடுகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இம் முயற்சிக்கு தம்மாலான ஒத்துழைப்பை வழங்கிவருவதாக டெனிஷ் மனித உரிமை குழுவின் தலைவரும், டென்மார்க் வெளிவிவகார அமைச்சின் பிரிவுத் தலைவருமான மான் விக்டர் தெரிவித்தார்

## தென்மராட்சி பாடசாலை உயர்தர பெறுபேறுகள்

(நமது நிருபர்)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் 1992 ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னணி வகிக்கின்றது. மேற்படி கல்லூரியில் கணிதப்பிரிவில் 3ஏ, பி இருவரும் 2ஏ, 2பி - இருவரும் பெற்றுள்ளனர். கலைப் பிரிவில் 3 ஏ, சி - ஒருவரும் ஏ, 2 பி. சி - இருவர், வர்த்தகப் பிரிவில் 2 ஏ, 2 பி - இருவர், ஏ, 3 பி - மூவர் உயிரியற் பிரிவில் 2 பி, 2 சி - ஒருவரும் பெற்றுள்ளனர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 125 பேர் பல்கலைக்கழகம் புகுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கலைப்பிரிவில் 2 ஏ, 2 சி ஒருவர், ஏ, 2பி, சி ஒரு

(6-ம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9 30 மணி தொடக்கம் 10 00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனை செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் வெற்றிஅரசன் தெரிவித்துள்ளார்.

## கிட்டுவின் மரணம் குறித்த இந்தியஅறிக்கையில்சந்தேகம்

### பி.பி. ஸி. ஆய்வாளர் எழுப்புகிறார்

கிட்டுவின் மரணம் சட்டமைவாகத் துரத்திப் பிடிக்கும் முயற்சியின்போது ஏற்பட்டதா அல்லது பழிவாங்கும் செயலா என்று பி. பி ஸி ஆய்வாளர் கேள்விஎழுப்பியுள்ளார்.

பி. பி. ஸி. மேலும் தெரிவிப்பதாவது:

திரு. கிட்டு 400 தொன் எடையுள்ள எம் பி அசாதி

[6-ம் பக்கம் பார்க்க]

## சயனைட் அருந்தியபின் கப்பலுக்கு தீவைத்தனர்

[மணிலா]

கப்பலுக்கு தீவைப்பதற்கு முன்னர் தளபதி கேணல்கிட்டுவும் ஏனைய ஒன்பது போராளிளும் சயனைட் அருந்திவிட்டனர் என அவர்களின் கப்பலை ஓட்டிய கப்டன் ஜெயச்சந்திரன் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

அவர்கள் கப்பலை

[6-ம் பக்கம் பார்க்க]

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் வே. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ், தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் கான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை, 177A மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5853)

### டில்கா வாச் வேக்ஸ்& றேடியோ வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். [சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.] தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி. [வானவில் கூல்பார் அருகாமையில்], யாழ்ப்பாணம். கிளை, இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. [சி-5795]

### கலண்டர்கள் விற்பனைக்கு

அழகிய படத்துடனான மினி கலண்டர்கள் தொகையாக கொள்வனவு செய்பவர்களுக்கு ரூ 6/-க்கு விளம்பரம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தக சாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4017)

### ENGLISH

3 மாத ஆங்கிலப்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்படிப்புச் செய்பவர்களுக்கு அவசியமானது ஆரம்பம்; 23.1 93 பி.ப 5 மணிக்கு. கிழமையில் 2 நாட்கள் V N. KANDASA-MY A I. B. Part I (London) Inter [London] 87, திருநெல்வேலி றோட் [றயில்கடவைக்கு அண்மையில்] கொக்குவில். (4131)

### புலமைப்பரிசில் பரீட்சை

வருடாவருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 24-01-93 ஞாயிறு மு. ப. 8-00 மு. ப. 11-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பா...

### 48 ஆவது நிறைவுவிழா

தொல்புரம் மத்திய சன சமூகநிலைய 43 ஆவது நிறைவு விழா இன்று மாலை 6.00 மணியளவில் நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. அ. சகதேவன் தலைமையில் இடம் பெறும். விழாவில் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு நிலையச் செயலாளர் திரு. க. லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

### ஏ' ஆர். வி. மருந்தில்லை

யாழ். போதனா வைத்திய சாலையில் விசர்நாய்கடிக்குரிய ஏ ஆர். வி மருந்து முற்றாக தீர்ந்து போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இம்மருந்தினைப் பெற்றுக் கொள்வதற்காகச் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு யாழ்ப்பாண மக்கள் தினமும் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது [05]

## பாராட்டுகின்றோம்

மகாஜனக் கல்லூரி வீதி, தெல்லிப்பழையில் 2-3-1992 இல் களவுபோன துவிச்சக்கரவண்டிகள் இரண்டையும் யாழ் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றி 22-1-93 இல் உரிமையாளரான எம்மிடம் ஒப்படைத்தனர். இவர்களின் இச்சேவையை பாராட்டுகின்றோம். சேவை தொடரவும் வாழ்த்துகின்றோம்.

இராசரத்தினம் குடும்பத்தினர்

(4135)

## விக்னா

### கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

92 பரீட்சையில் சித்தியெய்தாத மாணவர்களுக்கு

கலை, வர்த்தகம்

மீட்டல் பிரிவு III

DAY CLASSES

ஆரம்பம் 26-1-93 காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. இரகுநாதன் |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. A. பிரபாகரன் |

மாலை நேர வகுப்பு

| | | |
|---|---|---|
| இந்துநாகரிகம்] இந்துசமயம் ] | — | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

செவ். வியா. சனி. ஞாயிறு ஆகிய நான்கு நாட்களும் நடைபெறும.

கணக்கியல் வகுப்பு வாரத்தில் 8 மணித்தியாலம் நடைபெறும்.

(சி-5859)

### குழாய்க் கிணறு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் உப அலுவலகத்தின்கீழ் இயங்கும் தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்திற்கு அண்மையில் பிரதேச சபையினரால் குழாய் கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக் கிணற்றினால் அருகிலுள்ள விக்கினேஸ்வரா வித்தியாசாலை மற்றும் பொது ஸ்தாபனங்களும், பொது மக்களும் பயன் பெறுவதாகக் கூறப்படுகிறது. (42)

### புதியஇன முட்டை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் - சங்குவேலி வீதியில் செயற்பட்டு வரும் சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலத்தில் கோழி வளர்ப்புக்கு தேவையான நல்லஇன அடை வைக்கும் முட்டைகள் தலா ஒன்பது வீதம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

திருநெல்வேலி விவசாயப் பண்ணையிலுள்ள கால்நடை உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 'பி' என்ற புதிய இன முட்டைகளே இவ்வாறு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (42)

### ஆய்வரங்கம்

சுதேசியக் கலாமன்றத்தின் ஆதரவில் கவிஞர் நாவண்ணனின் கதை கண்ணீர் கவிதை நூலின் ஆய்வரங்கம் இன்று பிற்பகல் மூன்றுமணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

### வருடாந்த விழா

அராலி களவத்துறை சன சமூக நிலையத்தின் வருடாந்த விழா இன்று சனிக்கிழமை [23-01-93] பிற்பகல் 5 மணியளவில் தலைவரின் தலைமையில் நடைபெறும். பிரதம பேச்சாளராக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்கிறார்கள். விசேட நிகழ்ச்சியாக 'பாரதியின் சிந்தனைகள் நனவாகினவா' என்னும் பொருள் பற்றி பட்டிமன்றமும் இடம் பெறும்.

## Association for Health & Counselling Shanthyaham

## SPECIAL LECTURE

**SPEAKER:**
DR. INGE GENEFKE M. D., D. M. Sc. hc.
Medical Director of RCT/IRCT,
Copenhagen, Denmark.

**THEME:** "A NEW GROUP OF PATIENTS"

**DATE:** Sunday, January 24, 1993

**TIME:** 9.00 a.m.

**PLACE:** Thodarpaham, 657/1, Hospital Road, Jaffna.

S. M. Selvaratnam
SHANTHYAHAM

(4136)

## நினைவு கூருகின்றோம்..

### 1993-01-23

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பிற் சிறிலங்காக் காவற்றுறையினரால் கைதாகி இதே தினத்தில் காவல் நிலையத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்ட -

★ தேவன் [ரி. ஜெயதேவன் - செங்கலடி - மட்டக்களப்பு]

திருக்கோணமலைக் கடலோரம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கரையொதுங்கிய தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணம் -சுன்னாகம், கட்டுவன், பெரியவிளான் தெல்லிப்பழைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமான, எறிகணை மற்றும், துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு மணலாறு - தென்னமரவடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

கப்டன் நேசன் [இராசதுரை ஜெயச்சந்திரன் - செல்வநாயகபுரம் - திருக்கோணமலை]

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம் - இளவாலை, முள்ளானைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் வல்லவன் [சாந்தமூர்த்தி குகமணி - ஆத்தியடி, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்]

இதே பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது அடித்துக் கொலை செய்யப்பட்ட -

சந்தோசம் [செல்லையா சிவகுமார் - உடையார் கிணற்றடி, அளவெட்டி கிழக்கு - யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

அல்பேட் [முத்தையா ரஞ்சநாதன் - இணுவில் வீதி, மானிப்பாய் - யாழ்ப்பாணம்]

1991 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

குமணன் [— முத்துக்குமார் - அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று - அம்பாறை]

## சமுத்திரா

உற்பத்தி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி. [வாணிக் கூல்பார் அருகாமையில்], யாழ்ப்பாணம். இனை, இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. [சி-5795]

## கலண்டர்கள் விற்பனைக்கு

அழகிய படத்துடனான மினி கலண்டர்கள் தொகையாக கொள்வனவு செய்பவர்களுக்கு ரூ 6/-க்கு விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புதிக சாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4017)

## *ENGLISH*

3 மாத ஆங்கிலப்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற் படிப்புச் செய்பவர்களுக்கு அவசிய மானது ஆரம்பம்; 23.1 93 பி.ப 5 மணிக்கு. கிழமையில் 2 நாட்கள். V N. KANDASA-MY A I. B. Part I (London) Inter [London] 87, திருநெல்வேலி றோட் [றயில்கடவைக்கு அண்மையில்] கொக்குவில். (4131)

## புலமைப்பரிசில் பரீட்சை

வருடாவருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 24-01-93 ஞாயிறு மு. ப. 8.00 மு. ப. 11-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (4116)

## 105 கோடி நிதி உதவி

(கொழும்பு)

இலங்கையில் கிராம நகர்ப்புறங்களில் வசிக்கும் ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளைச் வழங்க உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனம் சுமார் நூற்றி ஐந்து கோடி ரூபாவை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளது.

## பாலர் பாடசாலை கட்டடம் திறப்பு

(பருத்தித்துறை)

கரவெட்டி நாமகள் பாலர் பாடசாலைக்குச் சுமார் 50,000 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலைக் கட்டடத்தை யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். திரு க. வேலாயுதபிள்ளை தலைமையிலே நடைபெற்ற இவ் விழாவிலே கரவெட்டி பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. செ. ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

---

## கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

92 பரீட்சையில் சித்தியெய்தாத மாணவர்களுக்கு

**கலை, வர்த்தகம் மீட்டல் பிரிவு III**

**DAY CLASSES**

**ஆரம்பம் 26-1-93 காலை 8 மணி**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு: கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. இரகுநாதன் |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. A. பிரபாகரன் |

மாலை நேர வகுப்பு

| | | |
|---|---|---|
| இந்துநாகரிகம்] இந்துசமயம் ] | — | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

செவ். வியா. சனி. ஞாயிறு ஆகிய நான்கு நாட்களும் நடைபெறும.

கணக்கியல் வகுப்பு வாரத்தில் 8 மணித்தியாலம் நடைபெறும்.

(சி-5859)

---

திருநெல்வேலி விவசாயப் பண்ணையிலுள்ள கால்நடை உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 'பி' என்ற புதிய இன முட்டைகளே இவ்வாறு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (42)

## ஆய்வரங்கம்

சுதேசியக் கலாமன்றத்தின் ஆதரவில் கவிஞர் நாவண்ணனின் கதை கண்ணீர் கவிதை நூலின் ஆய்வரங்கம் இன்று பிற்பகல் மூன்றுமணி ளவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

## வருடாந்த விழா

அராலி ளவத்துறை சனசமூக நிலையத்தின் வருடாந்த விழா இன்று சனிக்கிழமை [23-01-93] பிற்பகல் 5 மணியளவில் தலைவரின் தலைமையில் நடைபெறும். பிரதம பேச்சாளராக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்கிறார்கள். விசேட நிகழ்ச்சியாக 'பாரதியின் சிந்தனைகள் நனவாகினவா' என்னும் பொருள் பற்றி பட்டிமன்றமும் இடம் பெறும்.

---

# சமுத்திரா உற்பத்தி நிறுவனம்

**தொல்புரம், சுழிபுரம்.**

"வளம் பேணுவோம் வளமுடன் வாழ்வோம்"

# குரக்கன் கொள்வனவு

எமது தேவைக்கு உடன் எம்மால் தரமான குரக்கன் கொள்வனவு செய்யப்படும். தரத்திற்கு ஏற்ப கிலோ ரூபா 24/- வரை வழங்குவோம்.

**நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.**

ஏனைய தானியங்களும் கொள்வனவு செய்வோம். விபரத்திற்கு எழுத்து மூலம் உங்களிடமுள்ள தானியத்தின் அளவு, விலையை அறியத்தரவும்.

23. 1. 1993 (சி/5858) - நிர்வாகிகள்

---

# நினைவு கூருகின்றோம்..

## 1993-01-23

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பிற் சிறிலங்காக் காவற்றுறையினரால் கைதாகி இதே தினத்தில் காவல் நிலையத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்ட -

★ தேவன் [ரி. ஜெயதேவன் - செங்கலடி - மட்டக் களப்பு]

திருக்கோணமலைக் கடலோரம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கரையொதுங்கிய தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணம் -சுன்னாகம், கட்டுவன், பெரியவிளான் தெல்லிப்பழைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமான, எறிகணை மற்றும், துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு மணலாறு - தென்னைமரவடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

கப்டன் நேசன் [இராசதுரை ஜெயச்சந்திரன் - செல்வநாயகபுரம் - திருக்கோணமலை]

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம் - இளவாலை, முள்ளானைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் வல்லவன் [சாந்தமூர்த்தி குகமணி - ஆத்தியடி, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்]

இதே பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது அடித்துக் கொலை செய்யப்பட்ட-

சந்தோசம் [செல்லையா சிவகுமார் - உடையார் கிணற்றடி, அல்வெட்டி கிழக்கு - யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

அல்பேட் [முத்தையா ரஞ்சநாதன் - இணுவில் வீதி, மானிப்பாய் - யாழ்ப்பாணம்]

1991 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

குமணன் [ — முத்துக்குமார் - அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று - அம்பாறை]

மட்டக்களப்பு - ஏரன்ஸ் ஒழுங்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

தயான் [இராசமாணிக்கம் ஜெயச்சந்திரன் - இருதயபுரம் கிழக்கு - மட்டக்களப்பு]

யாழ்ப்பாணம் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

மேஜர் தாரணி [மதிவதனி சுப்பிரமணியம்-அத்தாய் பூநகரி - கிளிநொச்சி]

1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கரவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கணேஷ் [தம்பிமுத்து சுந்தரலிங்கம் - கல்முனை - அம்பாறை]

மட்டக்களப்பு - குறுமண்வெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

குயிலன் [சுந்தையா சத்தியா - பார் வீதி - மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5855)

உ

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

### அன்னம்மா அம்மாள்– குமாரசுவாமிக் குருக்கள்

(கீரிமலை)

நிகழும் ஆங்கிரச வருஷம் தைமாதம் 2ஆம் திகதி (16-01-93) அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் ஆத்ம சாந்திக்கிரியைகள் நீர்வேலி வடக்கில் உள்ள பிட்சாடனக்குருக்களின் இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

24-01 93 ஞாயிற்றுக்கிழமை - தசாகம்
25 01 93 திங்கட்கிழமை - ஏகோதிஷ்டம்
26-01-93 செவ்வாய்க்கிழமை - சபிண்டீகரணம்
27-01-93 புதன்கிழமை - கிருகயக்ஞம்

தற்போதைய சூழ்நிலை காரணமாக தனித்தனியாக அழைப்பு அனுப்ப முடியவில்லை. இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

நீர்வேலி. சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்
(4123)

---

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,
நுகர்வோர்களுக்கும்,

### பங்குப் பணம் ரூபா 100/-

1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்திற்கமைய உபவிதி 18(1) ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும்.

பங்குப் பணப் பெறுமதியை ரூபா 100/- ஆக அதிகரிக்காத தற்போதைய அங்கத்தவர்கள் 05 03 93 இற்குப் பின்னர் அங்கத்துவ உரிமையை இழந்து சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினராகவோ, பொதுச் சபை உறுப்பினராகவோ, பணிப்பாளர்சபைஉறுப்பினராகவோ பதவி வகிக்க முடியாததுடன், வாக்களிக்கும் உரிமையினையும் இழந்துவிடுவர். 5-3-93 இற்குப் பின்னர் பங்கு நிலுவையைச் செலுத்தினாலும், செலுத்திய திகதியில் இருந்து ஒரு வருடம் அங்கத்துவ உரிமையை அனுபவிக்கக் காத்திருக்க வேண்டும்.

எனவே காலதாமதமின்றி தற்போது அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தமது பங்குப்பணத்தை ரூபா 100/- ஆக அதிகரிப்பதற்கு 5-3-93 இற்கு முன்னர் தங்கள் கிளைகளில் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணபபடுத்துவதுடன், சங்க வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். மேலதிக விபரங்களுக்குச் சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

க. பத்மகாந்தன் — தலைவர் (சி-5851) க. திருமுருகராசா — செயலாளர்

---

சகல பனை, தென்னை
தொழில் வல்லுனர்களுக்குமான

---

## பதவி வெற்றிடம்
### உற்பத்தி முகாமையாளர் பதவி

கல்வித் தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத்திட்டத்தில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
(இ) க. பொ. த. [உயர்தரம்] பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுட்பட 3பாடங்களில் சித்தி. உள்ளூர் மூலவள தொழிலில் 2வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:- பனை தென்னை மூலவள உற்பத்தித் துறையில் பெற்றுள்ள அனுபவமும் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

வயது:- 21 தொடக்கம் 40 வருடங்கள் வரை

சம்பளத்திட்டம்:
சப்பள இலக்கம் 106 - 7/93க்கு அமைவாக கீழ்கண்டவாறு இருக்கும்.
1105 — 2170
60x4 — 75x11

பிணைப்பணம்:
உரொக்கம் - 3000/-
ஆதனம் - 5000/-

விண்ணப்பம் "பொதுமுகாமையாளர் தென்மராட்சி பச்சிலைப் பள்ளி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அலுவலகம் வரணி" பருத்தித் துறை வீதி) என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி. 31-01 93**

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி பச்சிலைப் பள்ளி.
தெ. ப. பொ. கூ. சங்கங்களின்
கொத்தணி, வரணி.
(4133)

---

## 31-ம் நாள் வீர அஞ்சலி



---

வைபவத்தில்கலந்துகொள்ளாத மாணவருக்கு

## மகாபொல கொடுப்பனவு அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

மகாபொல வைபவத்திற்கு செல்லாத யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இதுவரை மானியங்கள் ஆணைக்குழுவினால் பணம் அனுப்பிவைக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப் படுகிறது.

1990 - 91 கல்வியாண்டில் பல்வேறு கஷ்டநிலை காரணமாக மாத்தளையில் இடம் பெற்ற மாகாபொல வைபவத்திற்கு செல்லாத மாணவர்களுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இம்மாணவர்கள் 1991 - 92 நடைபெறும் மகாபொல வைபவத்தில் கலந்து கொண்டால் மாத்திரமே நிலுவையுடன் சேர்த்து உரிய பணம் வழங்கப்படுமென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (05)

### நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியருமான அமரர் க. வித்தியானந்தனின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் தலைமையில் இந்நிகழ்வு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெறும். விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜாவின், நினைவுரையும், அதைத் தொடர்ந்து நாடக இசையரங்கும் இடம் பெறவுள்ளது.

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



முல்லைத்தீவு கோட்டச்சிறப்புப் பொறுப்பாளர்

### மேஜர் செங்கோலன்
### (செங்கோல் மாஸ்ரர்)
(பொன்னுத்துரை பாலமுருகேசு)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,
நுகர்வோர்களுக்கும்.

பங்குப் பணம் ரூபா 100/-

1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்திற்கமைய உபவிதி 18(1) ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும்.

பங்குப் பணப் பெறுமதியை ரூபா 100/- ஆக அதிகரிக்காத தற்போதைய அங்கத்தவர்கள் 05 03 93 இற்குப் பின்னர் அங்கத்துவ உரிமையை இழந்து சங்கத்தின் இளைஞர்குழு உறுப்பினராகவோ, பொதுச் சபை உறுப்பினராகவோ, பணிப்பாளர்சபை உறுப்பினராகவோ பதவி வகிக்க முடியாததுடன், வாக்களிக்கும் உரிமையினையும் இழந்துவிடுவர். 5-3-93 இற்குப் பின்னர் பங்கு நிலுவையைச் செலுத்தினாலும், செலுத்திய திகதியில் இருந்து ஒரு வருடம் அங்கத்துவ உரிமையை அனுபவிக்கக் காத்திருக்க வேண்டும்.

எனவே காலதாமதமின்றி தற்போது அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தமது பங்குப்பணத்தை ரூபா 100/- ஆக அதிகரிப்பதற்கு 5-3-93 இற்கு முன்னர் தங்கள் இலைகளில் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்துவதுடன், சங்க வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். மேலதிக விபரங்களுக்குச் சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

க. பத்மகாந்தன்
தலைவர்

க. திருமுருகராசா
செயலாளர்

(சி-5851)

---

சகல பனை, தென்னை
தொழில் வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றிலிருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப்பகுதித் தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாகும் ஆகவே நீங்கள், உங்கள் பகுதிகளிலுள்ள மேற்படி சங்கங்களோடு உடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்றுத் தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிடுவிக்கக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். அனுமதியற்ற இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தென்மராட்சி கொத்தணி

1. கொடிகாமம் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
2. பளை ,, ,, ,, ,,
3. சாவகச்சேரி ,, ,, ,, ,,

- வடமாகாண தெ. ப. பொ. உ. வி.
கூ. ச. சமாசம்

(சி-5835)

---

ஆதனம் - 5000/-

விண்ணப்பம் "பொதுமுகாமையாளர் தென்மராட்சி பச்சிலைப் பள்ளி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அலுவலகம் வரணி" பருத்தித்துறை வீதி) என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி. 31-01 93

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி பச்சிலைப் பள்ளி.
தெ. ப. பொ. கூ. சங்கங்களின்
கொத்தணி, வரணி.

(4133)

---

## 31-ம் நாள் வீர அஞ்சலி



### வீரவேங்கை சுரேந்தர்
[ஆனந்தசாமி ஆனந்தராஜ்]

தாயின்மடியில்: 14. 06. 1970
தாயகவிடிவில்: 24. 12. 1992

வீரமகனே, அண்ணனே தம்பியே நண்பனே
இளமையிலும் இனிமையான வாழ்க்கையிலும் மேலாக
உன் தாய்நாட்டின் இலட்சியம் பற்றிற்காய்
விடுதலைப் போராட்டத்தில் இணைந்தாய்
உன் வீரமிகு எழுச்சிக்களத்தில் எத்தனை விழுப்புண்களை
உன் உடலில் தாங்கினாய்
ஆனாலும் எம்மை எல்லாம் காண்பதற்கு
"வருவாய், வருவாய்" என ஒவ்வொரு நேரமும்
ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்தோம்
ஈற்றில் உன் வீரமரண செய்தியே எமக்கு எட்டியது!
உன் வீரமரண உடலையும் காண்பதற்கு பாக்கிய
மற்றவர்களாகவும் உள்ளோமே?
இனிமேலும் உன் மழலை முகத்தையும் மழலைச்
சிரிப்பையும் காணமாட்டோமா
உன்னுடன் பழகமாட்டோமா என உன் பிரிவால்
தவிக்கின்றோம்
ஆனாலும் உனதும் உன்போன்ற போராளிகளினதும்
பாதை வெல்லும்
நீர் தமிழீழ சரித்திரத்தில் என்றுமே நிலைத்திருப்பீர்

(வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்துப் போராளிகளையும் இந்நாளில நினைவு கூருகின்றோம்.)

எமது இல்லத்தில் 06 02. 93இல் நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேட்டுக் கொள்கிறோம்,

பழையபாற்சாலைஒழுங்கை,
இணுவில் மேற்கு.

அம்மா, அப்பா, அண்ணன்மார்,
தம்பிமார், தங்கைமார், மருமகன்

(3995)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



முல்லைத்தீவு கோட்டச்சிறப்புப் பொறுப்பாளர்

### மேஜர் செங்கோலன்
### (செங்கோல் மாஸ்ரர்)
(பொன்னுத்துரை பாலமுருகேசு)

மழலையாக: 05-08-1966
மாவீரனாக: 24-12-1992

வரணியிலே பிறந்தாய்
வளமான சங்கத்தார் வயலினிலே தவழ்ந்தாய்
மணலாற்றுக் காட்டினிலே புலியாகப்புகுந்தாய்
மண்மீட்புப் போரினிலே மாவீரன் ஆனாய்
பயிற்சி எடுக்கையில் நீ பலர்மனதைக் கவர்ந்தாய் - பின்
பயிற்சி கொடுக்கின்ற ஆசானாய் உயர்ந்தாய்
நிதிப் பொறுப்பை ஏற்று நீதியுடன் செயற்பட்டு
நின் தளபதியின் மனத்தினில் ஓர் தனி இடமும் பிடித்தாய்
முல்லைக் கோட்டத்துச் சிறப்புத் தளபதியாய்
முடிவினிலே பணியேற்று முழக்கம் நீ செய்தாய்
பொன்னுத்துரை பொன்னம்மா பெற்றெடுத்த பாலன்
தலைவனவன் தந்தெடுத்த மேஜர் செங்கோலன்
எதிரிகளை அழிப்பதற்காய் பாய்ந்த புலி வீரன்
மணலாற்றுச் சமரினிலே வரலாறு ஆனான்.

23 - 01 - 93 இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவு அஞ்சலியிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் உறவினர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

"செல்வ பவனம்"
சங்கத்தார்வயல்,
இயக்கச்சி.

உன் பிரிவால் வாடும்
பெற்றோர், உடன்பிறந்தோர்,
மைத்துனர்மார், மருமக்கள்.

தற்போதைய முகவரி:
நாகர் கோவில் றோட்,
எழுதுமட்டுவாழ்.

(4030)

யாழ் மாவட்டச் சனசமூக நிலையங்களுக்கான

## அறிவித்தல்

சில சனசமூக நிலையங்கள் இன்னமும் 1993 ஆம் ஆண்டுக்கான தங்கள் நிலையத்துக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு விபரத்தைச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவிக்கவில்லையென எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது ஆதலின் 26-1-93 ஆம் திகதிக்கு முன்னர் இவ்விபரங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு சமர்ப்பித்து. நடைபெறவுள்ள சமாசத் தேர்தல்களில் தவறாது பங்குகொள்ளும்படி சகல சனசமூக நிலையங்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி
ஆணையாளர்
யாழ்ப்பாணம்

உள்ளூராட்சி திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
93-1-22

(கி-5862)

## காவியமாகிய புலிகளுக்கு வன்னிப் பகுதியில் அஞ்சலி

(வவுனியா)

வன்னிப் பகுதியில் தளபதி கேணல் கிட்டுவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் வீரச்சாவையொட்டி அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன. பல இடங்களில் கறுப்புக் கொடிகள், தோரணங்கள் கட்டப்பட்டுக் காட்சி தந்தன.

தமிழீழத் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

வவுனியாவில் கல்மடு, ஓமந்தை ஆகிய இடங்களில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் கட்டி இழுக்கப்பட்டு கொளுத்தப்பட்டன.

விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்ட பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இந்த அஞ்சலிக்கூட்டங்களில் கேணல் கிட்டு மற்றும் லெப். கேணல் குட்டிசிறி ஆகிய மாவீரர்களின் போராட்ட வாழ்க்கை பற்றி நினைவு கூரப்பட்டது. (இ)

## விசா மறுக்கப்பட்ட தமிழர்; சுவிஸ் அரசு விரைவில் முடிவு செய்யும்

### -தூதரக அதிகாரி தகவல்

(கொழும்பு)

சுவிட்சலாந்து மாதாந்தம் இரண்டு அல்லது மூன்று தமிழர்களை நாடுகடத்துகின்றது என்று கொழும்பிலுள்ள சுவிட்லாந்து இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார் சுவிட்சலாந்து தூதுவரகத்தின் முதலாவது செயலாளரான பிக்கோனி-ஹான்ஸ்- பீட்டர் மேலும் கூறுகையில், வருடாந்தம் முப்பது முதல் ஐம்பது தமிழர்கள் இவ்விதம் நாடுகடத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், சுவிட்சலாந்தின் சட்டங்களை மீறுபவர்களும் அரசியல் அடைக்கலம் மறுக்கப்பட்டவர்களுமே இவ்விதம் வெளியேற்றப்படுவதாக தெரிவித்தார். கடந்த ஐந்து வருடத்தில் மட்டும் சுமார் இருநூற்றைம்பது இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் எனவும் சுட்டிக்காட்டிய அவர் தமது நாட்டில் சுமார் முப்பதாயிரம் இலங்கைத் தமிழர்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அங்கிருக்கும் இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவார்களா எனக் கேட்கப்பட்டபோது அரசியல் அடைக்கலம் மறுக்கப்பட்டவர்கள் தொடர்பான இறுதி முடிவொன்று விரைவில் எடுக்கப்பட இருப்பதாக தெரிவித்தார்.

இது தவிர சுவிட்சலாந்திலிருந்து தமிழர்கள் தமது சொந்த விருப்பப்படி வெளியேற ஆரம்பித்திருப்பதாகவும் எனினும் எவரும் இலங்கைக்கு திரும்பியிருப்பதாக தெரியவரவில்லை எனவும் குறிப்பிட்டார்.

# வீர வணக்கம்

## 2ஆவது ஆண்டு நினைவு நாள்



சகல பனை தென்னை தொழில் வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றிலிருந்து கள்ளுப் பதனீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப் பகுதித் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதியிலுள்ள மேற்படி சங்கங்களுடன் உடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்றுத் தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் அனுமதியற்ற இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதனீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்தில் கொண்டு தங்களுக்கு ஏற்படக் கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

### தென்மராட்சி கொத்தணி

1. பச்சிலைப் பள்ளி பனை தெ.ப.பொ உ.வி.கூ.சங்கம்.
2. கொடிகாமம் தெ.ப.பொ.உ.வி கூ. சங்கம்.
3. சாவகச்சேரி தெ.ப.பொ.உ.வி கூ. சங்கம்.

தென்மராட்சி பச்சிலைப்பள்ளி.
தெ ப.பொ.கூ. சங்கங்களின்
கொத்தணி, வரணி.

(4132)

## பராமரிப்பாளர் பதவிக்கான வெற்றிடம்

யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், பராமரிப்பாளர் பதவிகளுக்கு பின்வரும் தகைமை



# மேஜர் தாரணி

**[ மதிவதனி சுப்பிரமணியம் ]**

அத்தாய், பூநகரி

பிறப்பு : 20 - 02 - 1968 வீரச்சாவு : 23 - 01 - 1991

விடுதலை தே[illegible] பாடிய குயில் இவள்;
விழிகளில் தீ சுமந்தாடிய புலி இவள்;
வீரத் தலைவனின் பாசமறை மகள் இவள்;
புயலாய் களத்தினை நாடிய பெண் இவள்
தளராத தளபதி தாரணி எங்கள்
பாதையில் வழிகாட்டும் தாரகை ஆயினள்.

பலாலி – கட்டுவனில் இராணுவத் தாக்குதலின் பின், எறிகணைத் தாக்குதலில் தலையில் காயமடைந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இவருக்கு எமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

(சி-5857)

**குடும்பத்தினர் - நண்பர்கள்**

---

வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றிலிருந்து கள்ளுப் பதனீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப் பகுதித் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மேற்படி சங்கங்களுடன் உடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்றுத் தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அனுமதியற்ற இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதனீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்தில் கொண்டு தங்களுக்கு ஏற்படக் கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தென்மராட்சி கொத்தணி**

1. பச்சிலைப் பள்ளி பனை தெ.ப.பொ உ.வி.கூ.சங்கம்.
2. கொடிகாமம் தெ.ப.பொ.உ.வி கூ. சங்கம்.
3. சாவகச்சேரி தெ.ப.பொ.உ.வி கூ. சங்கம்.

தென்மராட்சி பச்சிலைப்பள்ளி.
தெ ப.பொ.கூ. [illegible]ங்கங்களின்
கொத்தணி, வரணி.

(4132)

---

## பராமரிப்பாளர் பதவிக்கான வெற்றிடம்

யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், பராமரிப்பாளர் பதவிகளுக்கு பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றார். இப்பதவி தற்காலிகமானதும் ஊதியமற்றதும் ஆகும். ஆனால் மாதாந்தம் 375ரூபா நிலையான படியாக (Allowance) வழங்கப்படும். அத்துடன் வாழ்க்கைச் செலவுபபடியும் சேர்த்து வழங்கப்படும். 18-40 வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள். கல்வித் தகைமைகள் 8-ம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வெற்றிடங்கள் சுன்னாகம், பருத்தித்துறை, புன்னாலைக்கட்டுவன், கோப்பாய், புத்தூர் ஆகிய மத்திய மருந்தகங்களில் உள்ளதால் அம் மத்திய மருந்தகங்கள் அமைந்துள்ள சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,

விண்ணப்பங்கள் யாவும் முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, கல்வித்தகைமை என்பவற்றை உள்ளடக்கியதாக முழுத்தாள் அளவிலான கடதாசியில் நிரப்பப்பட்டு சம்பந்தப்பட்ட மத்திய மருந்தக பதிவு வைத்தியருடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

இப்பதவிக்கு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவானோருக்கு எழுத்துப் பரீட்சையும் வைக்கப்படும்.

இவ்விண்ணப்பங்கள் 06.02 93 திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-5861]

## சிந்தனைக்கு

செல்வாக்கு அழகு செழுங்கிளை தாக்குதல்
— அதிவீரராம பாண்டிதர் (நறுந்தொகை)

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 23-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# தண்டனை ஒரு நாள் கிடைத்தே தீரும்

தளபதி கிட்டு பயணம் செய்த கப்பலை இந்திய கடற்படை வழிமறித்த செயலைக் கண்டித்து தமிழ்நாட்டில் ஆர்பாட்ட ஊர்வலங்களை நடத்த திட்டமிட்டிருந்த தமிழ் தேசிய இயக்கத்தலைவர் ப. நெடுமாறன், தமிழக சட்ட சபையின் முன்னாள் சபாநாயகர் புலமைப்பித்தன், பேராசிரியர் சுந்தர பாண்டியன் ஆகியோர் தமிழ் நாட்டுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, ஆர்பாட்ட ஊர்வலத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது, இந்திய மத்திய அரசாங்கம் புரிந்த ஒரு சதிவேலையால், கொல்லப்பட்ட தமது இன மக்களுக்காக குரல் கொடுக்க இவர்களுக்குத்தடை விதிக்கப்பட்டதோடு, சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளார்கள். இதேவேளை இந்தியக் கடற்படை புரிந்த அடாவடித்தனமான வழிமறிப்பு குறித்தும், கிட்டு மரணமடைந்தது குறித்தும் தமிழகத்தில் உள்ள பிரதான 'திராவிடக் கட்சிகள்' -அ. தி. மு. க, தி. மு. க. - போன்ற கட்சிகள் எவையும் குரல் கொடுக்கவில்லை. அதாவது தமது இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு கொடூரத்திற்கு அவறறால் குரல் கொடுக்க முடியவில்லை. இவர்களின் இந்நிலைக்குக் காரணம் ஆட்சி அதிகாரமும், ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற அவாவுமேயாகும்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமானவர். புலிகள் எதிர்ப்பாளர் எனப் பெயர் பெற்றவர். ஆனால், தற்பொழுது தமிழகத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் அதிகரித்து விட்டது என காங்கிரஸ் கட்சிக்காரர் சிலரும் சுப்பிரமணியம் சுவாமியும் பேசத் தொடங்கியுள்ளனர்.

அதாவது. தி. மு. க. ஆட்சியை கலைக்க விடுதலைப்புலிகள் விவகாரத்தைப் பயன்படுத்திய அ. தி. மு. க. தலைவி செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக அதே விவகாரம் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டிலிருந்துதான் விடுதலைபபுலிகளுக்கு எதிராக முன்னர்எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக தப்பித்துக் கொள்ளலாம் என ஜெயலலிதா எண்ணினால் அதற்காக பின்னர் அவர் வருந்தவேண்டியே வரும்.

ஏனெனில், மத்தியில் இருக்கும் காங்கிரஸ் அரசிற்கு மாநில அரசுகளை கலைப்பதற்கு ஒரு காரணம் தேவையே ஒழிய அக்காரணம் எந்தளவிற்கு உண்மைத் தன்மை பொருந்தியது என்பதல்ல முக்கியம். ஆகையினால், ஜெயலலிதாவின் ஆட்சியைக் கலைக்க சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்கள் சுமத்தும் ஒரு சிறிய காரணமே மத்திய அரசிற்குப் போதுமானது.

ஆகையால், மாநில அரசு நீடிப்பதென்பது [illegible]

## பாலர் பாடசாலை திறப்பு

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அனுசரணையுடன் தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் சுமார் 35,000 ரூபா செலவில் பாலர் பாடசாலைக் கட்டடமொன்று கட்டப்பட்டுள்ளது. டார்லி பாலர் பாடசாலைக்கான இக்கட்டடம் அண்மையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

## நூலக சேவை ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கற்கோவளம் சனசமூக நிலையம் கற்கோவளம் கிராம மக்களின் அறிவு வளர்ச்சி கருதி நூலக சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது. அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இந்நூலகத்திற்கு சுமார் 15,000 ரூபா பெறுமதியான புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

# தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்

## சி. எம். யூ. மாநாடு தீர்மானம்

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு அதனடிப்படையில் வடக்கு - கிழக்கு மோதல் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று வர்த்தக் கைத்தொழில் மற்றும் பொது தொழிலாளர் சங்கத்தின் 22 ஆவது பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அம் மாநாட்டில் மேலும் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமும் ஆயுதப் போராட்டம் நடத்துபவர்கள் உட்பட தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் அனைவருடனும் பேச்சு வார்த்தைகள் அந்த அடிப்படையில் நடத்தப்படுவதன் மூலம் மோதல் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கில் மோதல்கள் என்ற சாட்டில் அவசரகால நிலையைப் பயன்படுத்தி முழு நாட்டிலும் மக்களை அடக்குவதில் அரசு ஈடுபட்டுள்ளது. எனவே வடக்கு கிழக்கில் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் யுத்தக் கொள்கையைக் கண்டனம் செய்கிறோம் எனவும் கூறப்பட்டுள்ளது.

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க பேச்சுவார்த்தை நடக்கிறதாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையில் கொழும்பு சென்ற தூதுக் குழுவினர் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டையும் இதனால் யாழ். போதனா வைத்தியசாலை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் ஏனைய வசதிகள் தொடர்பாகவும் பல கட்டங்களில் ஆராயப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருந்து தட்டுப்பாட்டின் காரணமாக யாழ். போதனா மருத்துவ மனையில் மரண வீதம் அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டி சென்ற ஆண்டின் வைத்தியசாலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றது.

சுகாதார அமைச்சில் அங்கீகாரம் பெற்று ஆனால் கூட்டுப்படை தலைமையலுவலக அனுமதி இன்றி கொழும்பு யாழ். பண்டகசாலையில் உள்ள பெருமளவு மருந்துகள் தொடர்பாக சுகாதார, இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும் தேவை ஏற்படும் போது ஜனாதிபதி செயலகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறும்என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கேரதீவு-சங்குப்பிட்டி பாதை திறக்குமாறு குருமார்மகஜர்

(மன்னார்)

கேரதீவு - சங்குப்பிட்டி பாதையைத் திறந்து வடபகுதி பயணிகளின் கஷ்டத்தைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு றோமன் கத்தோலிக்க மதகுருமார் சிறிலங்கா ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடபகுதிக்கு பிரயாணத்தை மேற்கொள்ளும் மக்களின் கஷ்டத்தை போக்கும் முகமாகவும் பிரயாணத்தை சுமுகமாக்கவும் கேரதீவு - சங்குப்பிட்டி பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் ஆயார் மேதகு இராயப்பு யோசப் ஞானாநந்தன் ஆண்டகையின் தலைமையின் கீழ் றோமன் கத்தோலிக்க மதத் தலைவர்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

நாட்டின் தென்பகுதியிலிருந்தும் மன்னார் பகுதியிலிருந்தும் மக்கள் கிளாலி பாதையூடாகவே வடக்கே பயணம் செய்து வந்தனர். இதுபோலவே வடக்கிலிருந்தும் மக்கள் கிளாலியைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது கிளாலியூடான பயணத்துக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக மக்கள் கஷ்டமடைந்துள்ளனர்.

இதன்காரணமாக மன்னார் பகுதியிலிருந்து மக்கள் சென்று வர முடியாதிருப்பதுடன் மன்னார் பல்கலைக்கழக மாணவர்களும் தங்கள் கல்வியைத் தொடர முடியாது தவிப்பதுடன் மன்னாரில் கடமைபுரியும் பிற பகுதி அரச ஊழியர்களும் தங்கள் குடும்பத்தாரை பலமாதங்களாக சென்று பார்க்க முடியாது தவிக்கின்றனர்.

ஆகவே இவற்றைக் கவனத்துக்கு எடுத்து மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை, மன்னார் பேராலயபங்குத்தந்தையும்மன்னார் மீனவ அபிவிருத்தி சம்மேளன தலைவருமான அருட் திரு ஜே. வி. தேவராஜ், வாழ்வுதய இயக்குனர் அருட் திரு. அல்பன், ஓ. எம். ஐ. மன்னார் துயர் துடைப்பு சங்கத் தலைவர் அருட்தந்தை ஏ. சேவியர் குருஸ் ஆகியோர் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# புத்தூரில் வாகன விபத்து சிறுமி ஸ்தலத்தில் பலி

(சாவகச்சேரி)

புத்தூர் சந்தைக் கருகாமையில் நடந்த விபத்தொன்றில் சிறுமி ஒருவர் தலை சிதறிய நிலையில் ஸ்தலத்திலேயே பலியானார். நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் இடம்பெற்ற இச் சோரவிபத்துப்பற்றி, மேலும்—

இடைக்காட்டுப் பகுதியைச் சேர்ந்தவரும், இடைக்காடு மகாவித்தியாலய ஆசிரியருமான திரு. பத்மநாதனும் அவரது பதினொரு வயது மகளான செல்வி கார்த்திகாவும் துவிச்சக்கரவண்டியொன்றில் பாடசாலை நோக்கி வந்து கொண்டிருந்ததாகவும். அப்போது வீதியில் வந்து கொண்டிருந்த லொறியொன்று துவிச்சக்கரவண்டியுடன் மோதியதால் விபத்து நேரிட்டதாகவும், லொறியின் சில்லுக்குள் அகப்பட்ட சிறுமியின் தலை சிதறியதால் அவர் பலியாகியதாகவும் தெரியவருகிறது. (06)

# நாட்டை விட்டு ஓட ஜெயலலிதா திட்டமிடுகிறார்

- டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அறிக்கை

(சென்னை)

ஜெயலலிதாவின் பதவி கண்டிப்பாக வருகிற 31ஆம்திகதிக்குள் பறிக்கப்படும். அதன்பின் [illegible]

உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதாவின் மீது ஊழல் குற்றச் சாட்டுகளும், வருமானவரி ஏய்ப்பு வழக்குகளும், அரசுக்கு [illegible]

# நல்ல ஆலோசகர்களே ஜெயலலிதாவின் உடனடித்தேவை

– வாழப்பாடி இராமமூர்த்தி

நல்ல ஆலோசனைகளை எடுத்துச் சொல்லக் கூடிய ஆலோசகர்களே ஜெயலலிதாவின் இன்றைய தேவையாகும் [illegible]

எங்கே முடிகின்றது என்பதை முதல்வரிடம் யாராவது எடுத்துச்சொல்லவேண்டும். கோபத்திற்கு வடிகால் எது என்பதற் [illegible]

பாண்டியன் ஆகியோர் தமிழ் நாட்டுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, ஆர்பாட்ட ஊர்வலத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது, இந்திய மத்திய அரசாங்கம் புரிந்த ஒரு சதிவேலையால், கொல்லப்பட்ட தமது இன மக்களுக்காக குரல் கொடுக்க இவர்களுக்குத்தடை விதிக்கப்பட்டதோடு, சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளார்கள். இதேவேளை இந்தியக் கடற்படை புரிந்த அடாவடித்தனமான வழிமறிப்பு குறித்தும், கிட்டு மரணமடைந்தது குறித்தும் தமிழகத்தில் உள்ள பிரதான 'திராவிடக் கட்சிகள்' -அ. தி. மு. க, தி. மு. க. - போன்ற கட்சிகள் எவையும் குரல் கொடுக்கவில்லை. அதாவது தமது இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு கொடூரத்திற்கு அவறறால் குரல் கொடுக்க முடியவில்லை. இவர்களின் இந்நிலைக்குக் காரணம் ஆட்சி அதிகாரமும், ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற அவாவுமேயாகும்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமானவர். புலிகள் எதிர்ப்பாளர் எனப் பெயர் பெற்றவர். ஆனால், தற்பொழுது தமிழகத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் அதிகரித்து விட்டது என காங்கிரஸ் கட்சிக்காரரர் சிலரும் சுப்பிரமணியம் சுவாமியும் பேசத் தொடங்கியுள்ளனர்.

அகாவது. தி. மு. க. ஆட்சியை கலைக்க விடுதலைப்புலிகள் விவகாரத்தைப் பயன்படுத்திய அ. தி. மு. க. தலைவி செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக அதே விவகாரம் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டிலிருந்துதான் விடுதலைபபுலிகளுக்கு எதிராக முன்னர்எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக தப்பித்துக் கொள்ளலாம் என ஜெயலலிதா எண்ணினால் அதற்காக பின்னர் அவர் வருந்தவேண்டியே வரும்.

ஏனெனில், மத்தியில் இருக்கும் காங்கிரஸ் அரசிற்கு மாநில அரசுகளை கலைப்பதற்கு ஒரு காரணம் தேவையே ஒழிய அக்காரணம் எந்தளவிற்கு உண்மைத் தன்மை பொருந்தியது என்பதல்ல முக்கியம். ஆகையினால், ஜெயலலிதாவின் ஆட்சியைக் கலைக்க சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்கள் சுமத்தும் ஒரு சிறிய காரணமே மத்திய அரசிற்குப் போதுமானது.

ஆகையால், மாநில அரசு நீடிப்பதென்பது தனியாக புலி எதிர்ப்பு உணர்வினாலோ அன்றி வேறொன்றினாலோ அல்ல. மத்தியிலுள்ள காங்கிரஸின் விருப்பத்தின் பேரிலேயே உள்ளது. அத்தோடு, பெரும்பான்மைப்பலம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சபை என்பதெல்லாம் இந்திய அரசியலைப் பொறுத்து முக்கியமானதொன்றல்ல.

மேலும், தமிழகத்தில் தி. மு. க. கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது; புலிகள் ஆதரவு கொள்கையினால் அல்ல அக்கட்சி அரசியல்வாதிகளிடம் காணப்பட்ட லஞ்சம், ஊழல் என்பனவே காரணமாகும். அதை விடுத்து விடுதலைப் புலிகளுடனான தொடர்பே தேர்தல் தோல்விக்குக் காரணம் என்றால் ஏற்புடையதல்ல.

இந்தியாவைப் பொறுத்து காங்கிரஸ் கட்சி ஆட்சி புரியாத மாநிலங்களில் உள்ள அரசாங்கங்களுக்கு மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசு நெருக்கடி கொடுப்பதே வழமையாகும். இந்த நிலையை உணர்ந்து கொள்ளாமல் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்குமாக அண்டையிலுள்ள தமது இன மக்களினது நியாய பூர்வமான கோரிக்கைக்கு எதிராகச் செயற்படுவதும், தமது மக்களின் உணர்வுகளை திசை திருப்பி விடுவதும் எதிர்காலத்தில் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும்.

இதற்காக இக்கட்சிகள் எதிர்காலத்தில் வருந்த வேண்டிவரும். தமது மக்களுக்கு உண்மைகளை மறைத்தமைக்காக அம்மக்களினால் தண்டிக்கப்பட வேண்டியும் வரும். உண்மைகள் புரியும் போது மக்கள் ஊமைகளாக கைகட்டிக்கொண்டு இருந்ததாக வரலாறு இல்லை.

# கேரதீவு-சங்குப்பிட்டி பாதை திறக்குமாறு குருமார்மகஜர்

(மன்னார்)

கேரதீவு - சங்குப்பிட்டி பாதையைத் திறந்து வடபகுதி பயணிகளின் கஷ்டத்தைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு றோமன் கத்தோலிக்க மதகுருமார் சிறிலங்கா ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடபகுதிக்கு பிரயாணத்தை மேற்கொள்ளும் மக்களின் கஷ்டத்தை போக்கும் முகமாகவும் பிரயாணத்தை சுமுகமாக்கவும் கேரதீவு - சங்குப்பிட்டி பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் ஆயார் மேதகு இராயப்பு யோசப் ஞானாநந்தன் ஆண்டகையின் தலைமையின் கீழ் றோமன் கத்தோலிக்க மதத் தலைவர்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

நாட்டின் தென்பகுதியிலிருந்தும் மன்னார் பகுதியிலிருந்தும் மக்கள் கிளாலி பாதையூடாகவே வடக்கே பயணம் செய்து வந்தனர். இதுபோலவே வடக்கிலிருந்தும் மக்கள் கிளாலியைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது கிளாலியூடான பயணத்துக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக மக்கள் கஷ்டமடைந்துள்ளனர்.

இதன்காரணமாக மன்னார் பகுதியிலிருந்து மக்கள் சென்று வர முடியாதிருப்பதுடன் மன்னார் பல்கலைக்கழக மாணவர்களும் தங்கள் கல்வியைத் தொடர முடியாது தவிப்பதுடன் மன்னாரில் கடமைபுரியும் பிற பகுதி அரச ஊழியர்களும் தங்கள் குடும்பத்தாரை பலமாதங்களாக சென்று பார்க்க முடியாது தவிக்கின்றனர்.

ஆகவே இவற்றைக் கவனத்துக்கு எடுத்து மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை, மன்னார் பேராலயபங்குத்தந்தையும்மன்னார் மீனவ அபிவிருத்தி சம்மேளன தலைவருமான அருட் திரு. ஜே. வி. தேவராஜ், வாழ்வுதய இயக்குனர் அருட் திரு. அல்பன், ஓ. எம். ஐ. மன்னார் துயர் துடைப்பு சங்கத் தலைவர் அருட்தந்தை ஏ. சேவியர் குருஸ் ஆகியோர் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டையும் இதனால் யாழ். போதனா வைத்தியசாலை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் ஏனைய வசதிகள் தொடர்பாகவும் பல கட்டங்களில் ஆராயப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருந்து தட்டுப்பாட்டின் காரணமாக யாழ். போதனா ... கை சமர்ப்பிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றது.

சுகாதார அமைச்சில் அங்கிகாரம் பெற்று ஆனால் கூட்டுப்படை தலைமையலுவலக அனுமதி இன்றி கொழும்பு யாழ். பண்டகசாலையில் உள்ள பெருமளவு மருந்துகள் தொடர்பாக சுகாதார, இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும் தேவை ஏற்படும் போது ஜனாதிபதி செயலகத்துடன்பேச்சுவார்த்தை நடைபெறும்என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

# புத்தூரில் வாகன விபத்து சிறுமி ஸ்தலத்தில் பலி

(சரவெட்டி)

புத்தூர் சந்தைக் கருகாமையில் நடந்த விபத்தொன்றில் சிறுமி ஒருவர் தலை சிதறிய நிலையில் ஸ்தலத்திலேயே பலியானார். நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் இடம்பெற்ற இக் கோரவிபத்துப்பற்றி, மேலும்—

இடைக்காட்டுப் பகுதியைச் சேர்ந்தவரும், இடைக்காடு மகாவித்தியாலய ஆசிரியருமான திரு. பத்மநாதனும் அவரது பதினொரு வயது மகளான செல்வி கார்த்திகாவும் துவிச்சக்கரவண்டியொன்றில் பாடசாலை நோக்கி வந்து கொண்டிருந்ததாகவும். அப்போது வீதியில் வந்து கொண்டிருந்த லொறியொன்று துவிச்சக்கரவண்டியுடன் மோதியதால் விபத்து நேரிட்டதாகவும், லொறியின் சில்லுக்குள் அகப்பட்ட சிறுமியின் தலை சிதறியதால் அவர் பலியாகியதாகவும் தெரியவருகிறது. (06)

# நாட்டை விட்டு ஓட ஜெயலலிதா திட்டமிருகிறார்

## - டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அறிக்கை

(சென்னை)

ஜெயலலிதாவின் பதவி கண்டிப்பாக வருகிற 31ஆம்திகதிக்குள் பறிக்கப்படும். அதன்பின்னர் அவர் நாட்டை விட்டோட திட்டமிட்டுள்ளார். இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் அவர் நாட்டைவிட்டு தப்பியோடாமலிருப்பதற்காக அவர் மீது அவதூறு வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யப் போவதாகவும், மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதாவின் மீது ஊழல் குற்றச் சாட்டுகளும், வருமானவரி ஏய்ப்பு வழக்குகளும், அரசுக்கு சொந்தமான நிலங்களை சொந்தப் பெயருக்கு மாற்றியது தொடர்பான வழக்குகளும் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அநாகரிகமான முறையில் ஆட்சி நடத்தி வரும் ஜெயலலிதாவிற்கு ஆட்சி நடத்த தகுதியில்லை எனவும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# தூரதர்ஷன் தொலைக்காட்சியில் இந்தி நிகழ்ச்சிகள் திணிப்பு

## தி. மு. க. கண்டனம்

(சென்னை)

தமிழக தொலைக்காட்சியில் திணிக்கப்பட்டுள்ள இந்தி நிகழ்ச்சிகளை அடுத்த மாதம் முதலாம் திகதிக்குள் திரும்பப் பெறாவிட்டால் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழக தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

1-1-93 முதல் தொலைக்காட்சியில் திணிக்கப்பட்டுள்ள இந்தி நிகழ்ச்சிகளை திரும்பப் பெற்று தமிழருக்கு உரிய உரிமைகள் வழங்கப்படாவிட்டால் பெப்ரவரி முதல்வாரத்தில் ரயில் மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்படும் என்றும், ஜனவரி 25 அன்று மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கநாளை முன்னிட்டு தொலைக்காட்சி நிலையங்களின் முன்பும், மத்திய அரசு அலுவலகங்களின் முன்பும் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்ட அறப்போர் நடத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நல்ல ஆலோசகர்களே ஜெயலலிதாவின் உடனடித்தேவை

## — வாழப்பாடி இராமமூர்த்தி

நல்ல ஆலோசனைகளை எடுத்துச் சொல்லக் கூடிய ஆலோசகர்களே ஜெயலலிதாவின் இன்றைய தேவையாகும் என்று தமிழக காங்கிரஸ்கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

சண்டே ஒப்சர்வர் பத்திரிகைக்கு பேட்டி அளித்த அவர் மேலும் கூறுகையில், அ. தி. மு. க. மட்டுமே விமர்சிக்கும்; காங்கிரஸ் பதிலுக்கு விமர்சிக்கக் கூடாது என்றால் அது ஒரு போதும் நடக்காது. காங்கிரசாரை அச்ச உணர்வுடன் மிரட்டி வைத்திருக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் ஜெயலலிதா செயல்பட்டு வருகிறார். அ. இ. அ. தி. மு. க. விற்கு பாரதீய ஜனதாக் கட்சி மீது திடீர்க் காதல் அரும்பியுள்ளது. மேலும் தி. மு. க. பற்றி அ. தி. மு. க இப்போது மௌனமாக இருப்பதைப் பார்த்தால் அவர்களுக்குள் அந்தரங்கமாக அரசியல் தொடர்பு ஏற்பட்டிருக்குமோ என்ற வியப்பு ஏற்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜெயலலிதாவுக்கு அரசியல் அநுபவம் போதாது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. தகுந்த ஆலோசனை சொல்லும் சிறந்த ஆலோசகர்தான் ஜெயலலிதாவின் உடனடித் தேவை. உரிமைகளின் வரம்பு எங்கே முடிகின்றது என்பதை முதல்வரிடம் யாராவது எடுத்துச்சொல்லவேண்டும். கோபத்திற்கு வடிகால் எது என்பதற்கும்தகுந்தஏற்பாட்டைசெய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யுத்த நிறுத்தம் முறிவடைந்தது

ஈராக்கின் வட பகுதியில் இருக்கும் விமானப் பறப்புக்கு தடை விதிக்கப்பட்ட வலயத்தில் பறந்து கொண்டிருந்த பிரான்சின் மிராஜ் விமானம் ஒன்றை குறிவைக்க முயன்ற ஈராக்கின் ராடர் நிலையம் ஒன்றின் மீது அமெரிக்க குண்டுவீச்சுவிமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. இதனையடுத்துஈராக் அறிவித்திருந்தஒருதலைப் பட்சமான போர் நிறுத்தமும் முறிவடைந்து போயுள்ளது. ஈராக்கின் வடபகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கோதே பிரான்ஸ் விமானத்தின் மீது தாக்குதல் நடத்த ஈராக் முயன்றதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஈராக்கில் இருக்கும் இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் குழுவொன்று பாக்தாத் போய் சேர்ந்துள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமணி சுந்தரம்

(மானிப்பாய்)

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த இராசமணி சுந்தரம் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் சுந்தரத்தின் (நாவற்குழி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற விமலராணி, ஜெயபூரணதேவி, சிவகுமார் (கூவிமையாளர் - சுந்தர்சன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறினிவாசன், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறீதர் சிறீராம், சிறீஜெயந்தி, சிறீதர்சினி, பிரதீபன், சியாமி, றொபிக்கா, பருத்தி, நிதர்சனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளின் பின் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு இன்று சனிக்கிழமை (23-1-1993) காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்;

சுந்தர்சன், சு. சிவகுமார்
மானிப்பாய். (4129. (மகன்)

## திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை

(நீர்வேலி)

நீர்வேலி இராச வீதியைச் சேர்ந்த திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை 22-1-1993 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி கந்தையாவின் (கைதடி கந்தையா) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், நாகமணி ஆகியோரின் அன்பு தாயாரும், திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியத்தின் அன்பு மாமியாரும், கே. எஸ். குணசிங்கம் (முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன விகிதரும், தற்கால லங்கா சீமேந்து நிறுவன விநியோகப்பகுதி விகிதர்), இரத்தினசிங்கம் (கனடா), நவரட்ணசிங்கம் (இத்தாலி), பரமநாதன் விவசாயஉற்பத்தி நீர்வேலி) தவராசா (சுவிஸ்), சுபாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சுபா, நிஷாந்தன், மகிந்தன், ஜனார்த்தன், சுகி ஆகியோரின் பாட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று [23-1-93] சனிக்கிழமை இராச வீதி, மேற்கு, பத்தாவத்தை வீதியில் உள்ள திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமியின் இல்லத்தில் நடைபெற்று பி. பகல் 1-00 மணி அளவில் நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்;

பத்தாவத்தை வீதி, கே. எஸ். குணசிங்கம்
நீர்வேலி. (4138) (பேரன்)

## PASTOR BONNY

இலங்கை பெந்தெகோஸ்தே சபையைச் சேர்ந்த பாஸ்டர் பொனி வெஞ்சர்குருஸ் 21-ம் திகதி வியாழனன்று பகிமைக்குள் பிரவேசித்து விட்டார். அன்னாரது அடக்க ஆராதனை 25-ம் திகதி திங்கட்கிழமை அன்று பி ப. 3 மணிக்கு 11, றொட்றிகோ பிளேஸ், மட்டக்குழியாவில் உள்ள இலங்கை பெந்தெகோஸ்தே சபை சாலையில் நடைபெறும்.

அச்சமயம் 111, கண்டிவீதி, சுண்டிக்குழியில் உள்ள இலங்கை பெந்தெகோஸ்தே சபையிலும் ஆராதனையொன்று நடைபெறும் விசுவாசிகளும் அன்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

## பருத்தித்துறைக்கு புதிய பிரான்ஸ் வைத்தியர்

[வடமராட்சி]

பருத்தித்துறை வைத்திய சாலைக்கு பிரான்ஸ் நாட்டு வைத்தியர்கள் தாதியர்கள் கொண்ட மூவர் புதிதாக வந்து சேர்ந்தனர். இவர்கள் 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்து வைத்தியசாலைக்குச் சென்றனர். (யோ)

## சயனைட்

வெடிக்கவைத்து தீயிட முன்னர் கப்பல் கப்டன் உட்பட ஒன்பது கப்பல் ஊழியர்களையும் கடலில் குதித்து தப்பச் செய்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய கடற்படைக்கப்பல்கள் கிட்டு பயணம்செய்த கப்பலுக்கு மிக அருகில் வந்து அவரை கைது செய்ய முயன்றபோது அவர் இவ்வாறு முடிவு செய்தார் எனவும், தமது அலுவலகத்துடன் இறுதியாகத் தொடர்பு கொண்டபின் சயனைட்டை அருந்தினார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி ஏழாம் திகதி சிங்கப்பூருக்கு அண்மையில் இந்தக் கப்பல் நின்றபோது சிறுபடகுகள் மூலம் இவர்கள் வந்து கப்பலில் ஏறிக் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் விபரங்களை இந்திய பொலிசாரை மேற்கோள் காட்டி இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ளது.

## சர்வதேச

ணைக் கமிஷன் நிறுவுமாறு ஐ. நா. செயலாளரைக் கோருவதென்பதாகும்.

இதேவேளை இக் கூட்டம் முடிவடைந்த பின்னர் திரு. நெடுமாறன் உட்பட இவ் அமைப்புகளைச்சேர்ந்த தலைவர்கள் தமிழக பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி

வர்.வர்த்தகப் பிரிவில் பி. 2சி. எஸ் ஒருவரும் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் ஏ, 2 பி, சி ஒருவர், ஏ, பி, 2 சி ஒருவர், 2 பி, 2 சி ஒருவர், பி, 3 சி இருவர். கலைப் பிரிவில் 2 பி, 2 சி இருவர், 3 பி,சி ஒருவர், பி, 3சி இருவரும் பெற்றுள்ளனர். (மு)

## சமாதான

அமைப்பு தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது. இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும், இந்தியாவுட

# பூநகரி - சங்குப்பிட்டி பாதையை போக்குவரத்துக்கு திறக்க இணக்கம்

### இராணுவம் வாபஸ்பற்றி தகவல் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்தைச் சிரமைக்கும் முயற்சியாக பூநகரி-சங்குப்பிட்டி கடல் பாதை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் பயணிகள் போக்குவரத்துக்காக திறந்துவிடப்படவுள்ளது.

இதற்கான முயற்சியாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக அதிகாரிகளுக்கும் கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலக அதிகாரிகளுக்கும் மற்றும் ஜனாதிபதியின் செயலாளருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் மேற்படி முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பாதையினூடான பயணிகள் போக்குவரத்துகள் யாவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நடைபெற இருக்கிறது. இதனால் மேற்படி தூதரகத்தினால் பயணிகளுக்கான "பாதை சேவை" ஒன்றும் ஆரம்பிக்கப்படுவதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கிறது.

எனினும் மேற்படி தீர்மானங்கள் எப்பொழுது நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்பது குறித்து முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாக நேற்று மாலைவரை தகவல் எதுவும் எமக்கு இடைக்கவில்லை.

மேற்படி நடைமுறைத் திட்டத்தின்படி இப்பாதையூடாக பயணிகள் செல்வதற்கு அனுமதிக்கும்படியான உத்தரவை ஜனாதிபதி பிரேமதாசாவே பிறப்பித்துள்ளதாகவும் ஆனால் மேற்படி போக்குவரத்துக்கு வசதியாக பூநகரியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை வாபஸ் பெறும்படியான பணிப்புரை எதுவும் தமக்கு கிடைக்கவில்லையென்று கூட்டுப்படைகளின் அலுவலக தலைமை அதிகாரி திரு. ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமையில் மேற்படி பகுதியூடான பயணிகள் போக்குவரத்து சாத்தியமாகுமா என்பதில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதனால் இந்த நிலைமைகள் குறித்து நேரடியாக ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு உத்தேசித்துள்ளதாக உத்தியோகப் பற்றற்ற தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

## கிட்டுவின்

என்ற கப்பலில் இவர் உயிரிழக்க நேர்ந்தது. இந்திய கடற்படையும், கரைக்காவல் பிரிவும் எப்படிக் கப்பலைக் கைப்பற்றியது என்பது தொடர்பாக இந்திய அரசும் விடுதலைப் புலிகளும் கூறும் கூற்றுக்களிலே வேறுபாடு நிலவுகின்றது. இனிக் கிட்டுவின் மரணம் எவ்வாறு சம்பவித்தது என்பதில் கூடக் கருத்து பேதம் உள்ளது. இது தொடர்பாகச் சட்ட அடிப்படையான கேள்விகள் கூட எழுந்துள்ளன.

இந்திய கப்பற்படை, விமானப்படை மற்றும் கரைக் காவற்படை என்பன இந்திய கடற் பிராந்தியத்தைக் காவல் புரிந்து நின்ற வேளையிலே, அதாவது கடற் சட்டத்துக்கு அமைய 200 மைல் தூர வீச்சில் காவலில் இருந்தபோது கப்பல் ஒன்று சந்தேகத்துக்குரிய வகையில் அடிக்கடி திசை மாறிச் செல்லக் காணப்பட்டது. பெருந் தொகை ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கப்பலில் இருக்கக் காணப்பட்டதால் சரணடையுமாறு கட்டளை இடப்பட்டதாக இந்திய தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்திய கட்டுப்பாட்டில் உள்ள கடல் பிராந்திய எல்லைக்குள் கப்பல் காணப்பட்டதா என்பது பற்றி இந்தியப் பாதுகாப்பு அதிகாரி குறிப்பிடவில்லை.

மேலும் இந்தியக் கரையிலிருந்து 200 மைல் பிரதேசத்துக்கு உள்ளேயே கிட்டுவின் கப்பல் எதிர்கொள்ளப்பட்டதா என்பது பற்றி பாது

சட்டத்தின்படி ஒருநாட்டுக் கடற் பிரதேசத்தில் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று நடமாடக் காணப்பட்டால் படை அந்தக் கப்பலைக் கலைத்துச் சென்று 200 மைல்களுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பிலும் கைப்பற்றலாம். அது அனைத்துலக நியதி. ஆனால் விடாப்பிடியாக மடக்கிப் பிடிக்கும் முயற்சி தொடங்கும்போது அந்த வெளிநாட்டுக் கப்பல் முதலில் இந்தியக் கடல் எல்லைக்குள் இருந்திருக்கவேண்டும். அப்படிச் செய்ய முன் எச்சரிக்கை செய்யப்படவேண்டும். உரிய எச்சரிக்கை அல்லது பார்வையிற்படக்கூடிய எச்சரிக்கை மற்றும் மின்மொறி எச்சரிக்கை வழங்கப்படவேண்டும். அதன் பிறகு கூடியமட்டும் துரத்திச்சென்று சிறைப்பிடிக்கலாம். முடியாது போனால் அந்தக் கப்பலைச் சேதப்படுத்தலாம். ஆனால் நீதியற்ற முறையில் அந்தக் கப்பல் துரத்திப்பிடிக்கப்பட்டது அல்லது சேதப்படுத்தப்பட்டது என்றுகண்டால் நட்டஈடுகோர கூறவில்லை. விடுதலைப்புலிகளும் அதர்ம நடவடிக்கை என்று கூறி நட்டஈடு கோரவில்லை.

எப்படியாயினும் கிட்டுவின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது மர்மமாகவே அமைந்துவிட்டது. கிட்டு அவர்களின் கப்பலை வழி மறித்த பின்னர் 36 மணி நேரத்துக்கு மேலாக இந்திய அதிகாரிகள் விடையத்தை முற்றாக மூடி மறைத்தமை பல அரசியல் விமர்சகர்களை சந்தேகமடையச் செய்துள்ளது

விடுதலைப் புலிகள் விழிப்புடனேயே நடந்து கொண்டாலும், விடுதலைப் புலிகளின் கப்பலை இந்தியப் படையினர் மறிக்க முடிந்தது என்றாலும் சென்னைக்கு 12 மைல் தொலைவில் அந்தக் கப்பல் எப்படி வந்தது என்பது கேள்விக்குறி. ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொன்றார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் வேளையில் தாமாக, தமது சுயவிருப்பத்

# தடுத்துவைக்கப்பட்டோர் நேற்றுவிடுவிக்கப்படவில்லை

(நெல்லியடி)

பலாலி மற்றும் களுத்துறை சிறைகளில், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் எவரும் நேற்றுக் காலை குமாரி கப்பலில் பருத்தித்துறைக்கு வந்து சேரவில்லை.

இவர்களின் வருகைக்காக பருத்தித்துறை துறைமுகத்தில் காத்து நின்ற நூற்றுக்கணக்கான உறவினர்கள் ஏமாற்றமடைந்து திரும்பிச் சென்றனர்

தடுத்து வைக்கப்பட்டோர் விடுதலை பற்றி, எதுவும் தமக்குத் தெரியாதென கப்பலிலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

(நீர்வேலி)

நீர்வேலி இராச வீதியைச் சேர்ந்த திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை 22-1-1993 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி கந்தையாவின் (கைதடி கந்தையா) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், நாகமணி ஆகியோரின் அன்பு தாயாரும், திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியத்தின் அன்பு மாமியாரும், கே. எஸ். குணசிங்கம் (முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன லிகிதரும், தற்போது லங்கா சீமேந்து நிறுவன விநியோகப்பகுதி லிகிதர்), இரத்தினசிங்கம் (கனடா), நவரட்ணசிங்கம் (இத்தாலி), பரமநாதன் விவசாயஉற்பத்தி நீர்வேலி) தவராசா (சுவிஸ்), சுபாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சுபா, நிஷாந்தன், மகிந்தன், ஜனார்த்தன், கவி ஆகியோரின் பாட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று [23-1-93] சனிக்கிழமை இராச வீதி, மேற்கு, பத்தாவத்தை வீதியில் உள்ள திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமியின் இல்லத்தில் நடைபெற்று பி. பகல் 1-00 மணி அளவில் நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்;

பத்தாவத்தை வீதி, நீர்வேலி. — கே. எஸ். குணசிங்கம் (பேரன்) — (4138)

# PASTOR BONNY

இலங்கை பெந்தெகோஸ்தே சபையைச் சேர்ந்த பாஸ்டர் பொனி வெஞ்சர்குருஸ் 21-ம் திகதி வியாழனன்று பரலோகத்துள் பிரவேசித்து விட்டார். அன்னாரது அடக்க ஆராதனை 25-ம் திகதி திங்கட்கிழமை அன்று பி. ப. 3 மணிக்கு 11, றொட்றிகோ பிளேஸ், மட்டக்குழியாவில் உள்ள இலங்கை பெந்தெகோஸ்தே சபை சாலையில் நடைபெறும்.

அச்சமயம் 111, கண்டிவீதி, சுண்டிக்குழியில் உள்ள இலங்கை பெந்தெகோஸ்தே சபையிலும் ஆராதனையொன்று நடைபெறும் விசுவாசிகளும் அன்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

111, கண்டிவீதி, சுண்டிக்குளி. — சகோ D ஸ்ரான்லி

(4139)

# புதுவசந்தங்களை
வரவேற்கும் வைபவத்திற்கான
# அழைப்பு

யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான 'வரவேற்பு வைபவம்' (WELCOME PARTY)

நாளை ஞாயிற்றுக்கிழமை (24-1 93) புதிய நூலக மண்டபத்தில் நடைபெறுமென இரண்டாம் வருட மாணவர்கள் அன்பான அழைப்பை விடுத்துள்ளனர்.

இவ்விருந்துபசார வைபவத்தில் கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இச்சங்கமப்பொழுதில் அனைத்துப் பீடமாணர்களையும் மனமகிழ் கலைக்கோலங்களிலும் வரவேற்பு வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

**கலைப்பீட**

**2 ஆம் ஆண்டு மாணவர்கள்**

யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி. (சி-5864)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சயனைட்டை அருந்தினார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி ஏழாம் திகதி சிங்கப்பூருக்கு அண்மையில் இந்தக் கப்பல் நின்றபோது சிறுபடகுகள் மூலம் இவர்கள் வந்து கப்பலில் ஏறிக்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் விபரங்களை இந்திய பொலிசாரை மேற்கோள் காட்டி இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ளது.

## சர்வதேச

ணைக் கமிஷன் நிறுவுமாறு ஐ. நா. செயலாளரைக் கோருவதென்பதாகும்.

இதேவேளை இக் கூட்டம் முடிவடைந்த பின்னர் திரு. நெடுமாறன் உட்பட இவ் அமைப்புகளைச்சேர்ந்த தலைவர்கள் தமிழக பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி

வர்த்தகப் பிரிவில் பி, 2சி, எஸ் ஒருவரும் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் ஏ, 2 பி, சி ஒருவர், ஏ, பி, 2 சி ஒருவர், 2 பி, 2 சி ஒருவர், பி, 3 சி இருவர், கலைப் பிரிவில் 2 பி, 2 சி இருவர், 3 பி, சி ஒருவர், பி, 3சி இருவரும் பெற்றுள்ளனர். (மு)

## சமாதான

அமைப்பு தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்ததோடு, இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும, இந்தியாவுடனும் பல பேச்சுக்களை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இடம்

முன்பு கல்வி பயின்ற பாடசாலை அதிபர்களிடம் இருந்து கடிதம் பெற்று வருமாறு தற்போது கல்விபயிலும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள தற்போது இயங்கிவரும் சில பாடசாலை மாணவர்கள் இங்கு இடம்பெயர்ந்து கல்வி பயில்கின்றனர் பழைய இடங்களுக்கு செல்லமுடியாத இவர்கள் இலவச சீருடையை பெறுவதற்கு முன்பு கல்விபயின்ற பாடசாலை அதிபரிடம் கடிதம் பெறுவதானால் அந்த பாடசாலைக்கு எப்படிச் சென்று திரும்ப முடியும் என்று பெற்றோர்கள் கேட்கின்றனர்.

இதேவேளை இந்த பிள்ளைகள் ஆகக்குறைந்தது ஒரு வருடங்களுக்கு மேலாக இந்த பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்றனர். இலவச புத்தகங்கள், உணவு முத்திரை பரீட்சை போன்றவை தற்போது கல்விபயிலும் பாடசாலைகளிலேயே வழங்கப்பட்டு வருகிறது.

## கிட்டுவின்

என்ற கப்பலில் இவர் உயிரிழக்க நேர்ந்தது. இந்திய கடற்படையும், கரைக்காவல் பிரிவும் எப்படிக் கப்பலைக் கைப்பற்றியது என்பது தொடர்பாக இந்திய அரசும் விடுதலைப் புலிகளும் கூறும் கூற்றுக்களிலே வேறுபாடு நிலவுகின்றது. இனிக் கிட்டுவின் மரணம் எவ்வாறு சம்பவித்தது என்பதில் கூடக் கருத்து பேதம் உள்ளது இது தொடர்பாகச் சட்ட அடிப்படையான கேள்விகள் கூட எழுந்துள்ளன.

இந்திய கப்பற்படை, விமானப்படை மற்றும் கரைக் காவற்படை என்பன இந்திய கடற் பிராந்தியத்தைக்காவல் புரிந்து நின்ற வேளையிலே, அதாவது கடற் சட்டத்துக்கு அமைய 200 மைல் தூர வீச்சில் காவலில் இருந்தபோது கப்பல் ஒன்று சந்தேகத்துக்குரிய வகையில் அடிக்கடி திசை மாறிச் செல்லக் காணப்பட்டது. பெருந் தொகை ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கப்பலில் இருக்கக் காணப்பட்டதால் சரணடையுமாறு கட்டளை இடப்பட்டதாக இந்திய தரப்பில் தெரிவிக்கப் படுகிறது. ஆனால் இந்திய கட்டுப்பாட்டில் உள்ள கடல் பிராந்திய எல்லைக்குள் கப்பல் காணப்பட்டதா என்பது பற்றி இந்தியப் பாதுகாப்பு அதிகாரி குறிப்பிடவில்லை.

மேலும் இந்தியக் கரையிலிருந்து 200 மைல் பிரதேசத்துக்கு உள்ளேயே கிட்டுவின் கப்பல் எதிர்கொள்ளப்பட்டதா என்பது பற்றி பாதுகாப்பு அதிகாரி தகவல் ஒன்றும் கூறவில்லை ஆனால், சென்னையிலிருந்து 12 மைல் தூரம்கூட இல்லாதபிரதேசத்தில் கப்பல் தீப்பற்றியதாக அவர் கூறினார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சின் கூற்றுப்படி கப்பலை போராளிகள் தகர்த்தார்கள். அதில் இறந்தவர்களில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் வரிசையில் இடம் பெறும் கிட்டு அவர்களும் ஒருவர்.

விடுதலைப் புலிகளின் கூற்று வேறுவிதமாக அமைந்துள்ளது அவர்களின் கூற்றுப்படி சென்னைக்கு 440 மைல் தொலைவில் கிட்டுவின் கப்பல் அனைத்துலககடற்பிராந்தியத்தில் கைது செய்யப்பட்டு சென்னைக்குக் கொண்டுவரப் பட்டதாக கூறப்படுகிறது.

கப்பல் இப்போது எரிந்து நீரில்மூழ்கிவிட்டது. ஆகவே உண்மை எதுவெனக் கண்டு பிடிப்பது கடினம். ஆனால் ஒன்று தெளிவாக உள்ளது. விடாப்பிடியாக ஒரு கப்பலைத் துரத்திச் செல்லவும், அருகேர்ந்து நகர்த்தவும், தடுத்து நிறுத்தவும் - இதற்கெல்லாம் அனுமதிக்கும் வழமையான சட்டத்துக்கு அமைவாகவே இவையெல்லாம் நடந்தனவா என்பதே கேள்வி.

# தடுத்துவைக்கப்பட்டோர் நேற்றுவிடுவிக்கப்படவில்லை

(நெல்லியடி)

பலாலி மற்றும் களுத்துறை சிறைகளில், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் எவரும் நேற்றுக் காலை குமாரி கப்பலில் பருத்தித்துறைக்கு வந்து சேரவில்லை.

இவர்களின் வருகைக்காக பருத்தித்துறை துறைமுகத்தில் காத்து நின்ற நூற்றுக்கணக்கான உறவினர்கள் ஏமாற்றமடைந்து திரும்பிச் சென்றனர்

தடுத்து வைக்கப்பட்டோர் விடுதலை பற்றி எதுவும் தமக்குத் தெரியாதென கப்பலிலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தின்படி ஒருநாட்டுக் கடற் பிரதேசத்தில் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று நடமாடக் காணப்பட்டால் படை அந்தக் கப்பலைக் கலைத்துச் சென்று 200 மைல்களுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பிலும் கைப்பற்றலாம். அது அனைத்துலக நியதி. ஆனால் விடாப்பிடியாக மடக்கிப் பிடிக்கும் முயற்சி தொடங்கும்போது அந்த வெளிநாட்டுக் கப்பல் முதலில் இந்தியக் கடல் எல்லைக்குள் இருந்திருக்கவேண்டும். அப்படிச் செய்ய முன் எச்சரிக்கை செய்யப்படவேண்டும். உரிய எச்சரிக்கை அல்லது பார்வையில்படக்கூடிய எச்சரிக்கை மற்றும் மின்மொறி எச்சரிக்கை வழங்கப் படவேண்டும். அதன் பிறகு கூடியமட்டும் துரத்திச்சென்று சிறைப்பிடிக்கலாம். முடியாது போனால் அந்தக் கப்பலைச் சேதப்படுத்தலாம். ஆனால் நீதியற்ற முறையில் அந்தக் கப்பல் துரத்திப்பிடிக்கப்பட்டது அல்லது சேதப்படுத்தப்பட்டது என்றுகண்டால் நட்டஈடுகோரலாம்; பெறலாம்.

ஆனால் கிட்டு அவர்களின் கப்பலை விடாப்பிடியாக விரட்டிப்பிடித்துச் சட்டத்துக்கு அமைவாகத்தான் நடந்து கொண்டதாக இந்தியா கூறவில்லை. விடுதலைப்புலிகளும் அதர்ம நடவடிக்கை என்று கூறி நட்டஈடு கோரவில்லை.

எப்படியாயினும் கிட்டுவின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது மர்மமாகவே அமைந்துவிட்டது. கிட்டு அவர்களின் கப்பலை வழி மறித்த பின்னர் 36 மணி நேரத்துக்கு மேலாக இந்திய அதிகாரிகள் விடையத்தை முற்றாக மூடி மறைத்தமை பல அரசியல் விமர்சகர்களை சந்தேகமடையச் செய்துள்ளது

விடுதலைப் புலிகள் விழிப்புடனேயே நடந்து கொண்டாலும், விடுதலைப் புலிகளின் கப்பலை இந்தியப் படையினர் மறிக்க முடிந்தது என்றாலும் சென்னைக்கு 12 மைல் தொலைவில் அந்தக் கப்பல் எப்படி வந்தது என்பது கேள்விக்குறி ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொன்றார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் வேளையில் தாமாக, தமது சுயவிருப்பத்தின் பேரில் கிட்டு அவர்கள் சென்னைக்கு அருகே செல்ல விரும்பி இருக்கமாட்டார். இவ்வாறு பி. பி. ஸி. ஆய்வாளர் சபாமிக்கி ஜேசி சந்தேகம் தெரிவிக்கின்றார்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 22- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9003

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-7627, 24-4323, 42-3732, 26-2414, 24-9597, 24-4361, 24-7087, 40-4760, 41-976, 26-3410, 28-912, 27 922, 27-6439, 28-9259, 26-5206, 27 8515, 24 4238, 24 5418, 27-1531, 26-1724, 28 254

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-0429, 24-6759, 40-7207, 42-1494, 42-0970, 28-3476, 41-8617, 28-6748, 27-7263, 24-7078, 42-7312, 26-7068, 41-9759, 26-9626, 41-4194, 42-0704, 42-1019, 41-9396.